## நமது பிரதமரும் மாலத்தீவு ஜனாதிபதி இருவரும் மாலத்தீவின் பாதுகாப்பு அமைச்சக கட்டிடத்தை ஒன்றாக தொடங்கி வைத்தனர் (ஜூலை 25, 2025)

ஜூலை 25, 2025

பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் மாலத்தீவின் மாண்புமிகு ஜனாதிபதி டாக்டர். முகமது முய்சு இருவரும் இன்று மாலியில் மாலத்தீவின் பாதுகாப்பு அமைச்சகம் (MoD) கட்டிடத்தை ஒன்றாக தொடங்கி வைத்தனர்.

2. இந்தியப் பெருங்கடலை பார்த்தபடி, பதினொரு தளம் கொண்ட இந்த கட்டிடம் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான வலுவான மற்றும் நீண்ட கால இராணுவ மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பின் அடையாளமாகும்.

3. இந்த MoD கட்டிடம் இந்தியாவின் நிதி உதவியுடன் கட்டப்பட்டுள்ளது மற்றும் மாலத்தீவின் பாதுகாப்பு மற்றும் சட்ட அமலாக்க அதிகாரிகளின் திறன்களை மேம்படுத்துவதற்காக இது பங்களிக்கும்.

மாலி

ஜூலை 25, 2025